ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2059/53 - 2018 පෙබරවාරි මස 23 වැනි සිකුරාදා - 2018.02.23

*2059/53 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 21/78* (XVI)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 140 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு,
கொழும்பு,
2018, பெப்புருவரி 21.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2018 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவக (திருத்தக்) கட்டளைச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படுவதன்மேல் வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. 2017 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆந் திகதிய 2017/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 83/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவக கட்டளைச் சட்டம் ஆனது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.

(1) அதன் 13 ஆம் பந்தியில் -

(i) அதன் (1) ஆம் உட்பந்தியின் (ச) மற்றும் (ஞ) என்னும் விடயங்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(ச) காது, மூக்கு, தொண்டை மருத்துவவியல் ;
(ஞ) மருத்துவ புற்றுநோயியல் ;";

(2) அதன் 14 ஆம் பந்தியில் -

(i) அதன் (1) (ஈ) (ii) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் :-

"(ii) நுண்ணுயிரியலின் சிறப்புக்கூறு தொடர்பில், இச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் மருத்துவம், மருத்துவ விஞ்ஞானங்கள், மருத்துவ மற்றும் இணைந்த விஞ்ஞானங்கள், சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் பீடங்களில் இருந்து ஒட்டுண்ணியல் சிறப்புக் கூறுகளின் சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள் (தலைமை தாங்கும்) பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மூன்று உறுப்பினர்கள்;";

(ii) அதன் (1) (உ) (i) (அ) என்னும் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் :-

"(அ) குழந்தைப்பேறு மருத்துவ மற்றும் பெண் மருத்துவ சிறப்புக்கூறு தவிர பிரதான பயிற்சி நிலையத்திலிருந்து மூன்று பிரதிநிதிகள் ;";

(iii) அதன் (1) (உ) (i) (ஆ) (viii) ஆம் உட்பந்தியினை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலம் :-

"(இ) உளமருத்துவ சிறப்புக்கூறு தொடர்பில், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பொது வைத்தியசாலையில் இருந்து ஒரு பிரதிநிதிக்குப் பதிலாக பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இருந்து பிரதிநிதி ஒருவர்;";

(iv) அதன் (1) (உ) (iii) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலம் :-

"(iii) சமுதாய மருத்துவ சிறப்புக்கூறு தொடர்பில் பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து சுழற்சிமுறை அடிப்படையில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பத்திற்கு மேற்படாத பிரதிநிதிகள் :-

(அ) மலேரியா தடுப்பு இயக்கம் ;
(ஆ) சுகாதார கல்விப் பணியகம் ;
(இ) சூழல் மற்றும் தொழில்சார் சுகாதார பணிப்பகம் ;
(ஈ) முகாமைத்துவ, அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் அலகு, சுகாதார அமைச்சு ;
(உ) தொற்றாநோய்களின் பணிப்பகம் ;
(ஊ) தேசிய சுகாதார விஞ்ஞானங்கள் நிறுவகம் ;
(எ) நோய்த்தொற்றியல் அலகு ;
(ஏ) தேசிய எஸ்ரிடி/எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் (என்எஸ்ஏசிபி) ;
(ஐ) குடும்ப சுகாதாரப் பணியகம் ; அத்துடன்
(ஒ) காசநோய்த் தடுப்பு மற்றும் மார்பு நோய்களுக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் (என்பிரிசிசிடி) ;";

(v) அதன் (1) (உ) (vii) ஆம் உட்பந்தியினை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும் அத்துடன் (1) (உ) (viii) என்னும் உட்பந்தியாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"(viii) கதிரியக்கவியல் சிறப்புக்கூறு தொடர்பில், லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இருந்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் ;";

(vi) அதன் (2) (ஈ) (i) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் :-

"(ஈ) (i) மருத்துவ புற்றுநோயியல், மருத்துவ நிர்வாகம் மற்றும் பால் நோயியல் சிறப்புக்கூறுகள் தவிர;";

(vii) அதன் (2) (ஈ) (ii) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் :-

"(iii) காது, மூக்கு, தொண்டையியல் சிறப்புக்கூறு தொடர்பில், உட்பந்தி (2) (ஈ) (i) (அ) மற்றும் (ஆ) வின் கீழான பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையிலிருந்து ஒரு பிரதிநிதி;";

(viii) அதன் (2) (ஈ) (iv) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் :-

"(iv) மேகநோயியல் சிறப்புக்கூறு தொடர்பில், இப்பந்தியின் உட்பந்தி 2 (ஈ) (i) (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட பயிற்சி நிலையங்களிடையே இருந்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒன்பது பிரதிநிதிகள் அவர்களில் குறைந்தபட்சம் மூன்று பேரேனும் பின்வரும் நிலையங்களிலிருந்தாதல் வேண்டும் :-

(அ) மகரகம புற்றுநோய் நிறுவகம் ; அத்துடன்

(ஆ) பால் ரீதியில் ஊடுகடத்தப்படுகின்ற நோய்கள் பிணியாய்வு நிலையம் (இதனகத்துப்பின்னர்) " "எஸ்ரிடி" பிணியாய்வு நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ;";

(ix) அதன் (2) (ஈ) (v) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(v) சரும நோயியல் சிறப்புக்கூறு தொடர்பில், பணிப்பாளர் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இருந்து பிரதிநிதியொருவர் ;";

(x) அதன் (2) (ஈ) (vi) ஆம் உட்பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தினைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(உ) இயைபான உயர் தொழில்சார் குழுவில் இருந்து இரண்டு உறுப்பினர்கள் ;";

ஆயினும் பந்தி 14(2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட சிறப்புக்கூறு ஆனது இலங்கையிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றை அல்லது ஒன்றிற்கு மேற்பட்டதை அத்தகைய சிறப்புக்கூறு தொடர்பில் கற்கைத்துறை ஒன்றைத் தாபிக்கின்றபோது இயைபான கற்கைச் சபையினால் அந்நேரத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு மேலதிக ஏற்பாடுகளுடன் அல்லது ஏற்பாடுகளின்றி 14(1) ஆம் பந்தியின் கீழ் தன்னிச்சையாக இருத்தல் வேண்டும் ;";

(xi) "(1) ஆம் (2) ஆம் உட்பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட கற்கைச் சபையின் அத்தகைய எல்லா உறுப்பினர்களும் பயிற்சியாளர்களாக இருத்தல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "14 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கற்கைச் சபையின் அத்தகைய எல்லா உறுப்பினர்களும் பயிற்சியாளர்களாக இருத்தல் வேண்டும் ;";

(3) அதன் 15 ஆந் திகதியில் -

(i) அதன் 3(உ) என்னும் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(உ) விசேட சபையொன்றின் பதவிக்காலம் கற்கைச் சபையின் பதவிக்காலம் காலாவதியாகும் திகதியன்று காலாவதியாதல் வேண்டும் :

ஆயினும் எவ்வாறாயினும், சபையானது அத்தகைய விசேட சபையினால் நடாத்தப்படுகின்றதான அவசரமான கல்விசார் மற்றும் பரீட்சை தொடர்புபட்ட விடயங்களுக்கு வசதியளிப்பதற்கான விதிவிலக்கான சந்தர்ப்பங்களின் கீழ் விசேட சபை ஒன்றின் பதவிக்காலத்தை நீடிக்கலாம்;";

03-466

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.